**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : STC 176/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-4/PW- 3 | Village: | |
| Name | : அழகர் ஜான் | Age | :42 |
| Father's/Husband's Name | : துரைராஜ் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 01/02/2023**

சாட்சியை திருநீலக்குடி காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ரவி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி சுந்தரமூர்த்தி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது அம்மன்குடியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2011ம் வருடம் ஒருநாள் அம்மன்குடியில் உள்ள அந்தோனியார் கோவில் அருகில் இருந்தபோது, திருநீலக்குடி போலிசார் அங்கு வந்து அங்கு நடந்த விபத்து சம்மந்தமாக விசாரணை செய்து அதற்காக என்னிடம் கையொப்பபம் வாங்கி கொண்டார்கள். (**பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 31/01/2018 ம் தேதி மாலை 03.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் அருகே நானும் பாக்கியராஜ் என்பவரும் இருந்தபோது, திருநீலக்குடி போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்து, எங்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள் என்றும், போலிசார் விசாரித்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : STC 176/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-3/PW- 2 | Village: | |
| Name | : அன்புராஜ் | Age | :49 |
| Father's/Husband's Name | : ஆரோக்கியசாமி | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of** 01/02/2023

சாட்சியை திருநீலக்குடி காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ரவி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி சுந்தரமூர்த்தி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது அம்மன்குடியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி மரியதாஸ் மற்றும் அ.சா.1 ஐ எனக்கு தெரியும். கடந்த 31/01/2018 ம் தேதி நான் அம்மன்குடியில் உள்ள மாதா கோவில் அருகில் நின்று கொண்டிருந்தேன். மரியதாஸ் அவரது வயலுக்கு சென்றுவிட்டு மாதாகோவிலுக்கு எதிரே நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது, பின்னால் இரு சக்கர வாகனத்தில் வந்த திருமலைராஜபுரத்தில் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்த சுந்தரமூர்த்தி என்பவர் மரியதாஸ் மீது மோதிவிட்டார். நான் ஓடி சென்று பார்த்தேன். மக்கள் கூட்டமாக வந்து விட்டார்கள். 108 ஆம்புலன்ஸ் மூலமாக அடிபட்ட மரியதாசை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : STC 176/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-1/PW-1 | Village: | |
| Name | : ரீகன் | Age | :31 |
| Father's/Husband's Name | : மரியதாஸ் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 01/02/2023**

சாட்சியை திருநீலக்குடி காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ரவி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி சுந்தரமூர்த்தி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது அம்மன்குடியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். சாட்சி மரியதாஸ் எனது அப்பா ஆவார். கடந்த 31/01/2018 ம் தேதி அம்மன்குடியில் உள்ள எனது வயலுக்கு சென்றுவிட்டு எனது அப்பா அம்மன்குடியில் உள்ள அந்தோனியார் கோவில் அருகில் புதுக்குடியில் இருந்து அம்மன்குடி செல்லும் சாலையில் சாலையின் வலது புறமாக நடந்து வந்து கொண்டிருந்தபோது, பின்னால் இரு சக்கர வாகனத்தில் வந்த சுந்தரமூர்த்தி என்பவர் எனது அப்பா மீது மோதிவிட்டார். அந்த இரு சக்கர வாகனத்தின் பதிவெண் TN 68C 1600 ஆகும். சத்தம்கேட்டு நான் சம்பவ இடத்திற்கு ஓடி சென்று பார்த்தேன். எனது வீடு சுமார் 50 மீ தூரத்தில் தான் உள்ளது. சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, எனது அப்பாவின் வலது கால்

உடைந்து இருந்தது. தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அப்போது சம்பவ இடத்தில் சுந்தரமூர்த்தியும் இருந்தார். பக்கத்தில் இருந்த அன்பு என்பவர் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து கும்பகோணம் அரசு மருத்துமனைக்கு எனது அப்பாவை சிகிச்சைக்கு கொண்டு சென்று சேர்த்தோம். பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்குஎனது அப்பா 45 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**